தேதி.02.09.2024

**சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்**

**O.S.No**. 175/2020 **திரு.சின்னச்சாமி** வா.சா.2

வா**.சா.2: சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

எனது பூமிக்கு மேல்புறம் ராமசாமி பூமி என்றால் ஆமாம். பின்னிட்டு சாட்சி இல்லை. மேல்புறம் ரோடு அதன்பின் பள்ளம் என்று சாட்சியம் அளிக்கிறார். ராமசாமி கவுண்டரை எனக்கு எத்தனை நாட்களாகத் தெரியும் என்றால் சிறிய வயதிலிருந்தே தெரியும். எங்கள் ஊர்க்காரர் என்றால் ஆமாம். அவரது தந்தை அரப்பளிக்கவுண்டர் என்றால் சரிதான். எனது பூமிக்கு மேல்புறம் உள்ள பூமியை சுப்பிரமணிக்கு விற்றுவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. யாருக்கு விற்றுவிட்டார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. அவர் விற்பனை செய்த நிலத்தில் என்ன விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் மக்காச்சோளம் போட்டுள்ளார்கள். யார் போட்டுள்ளார்கள் என்றால் ஐ.ஜி நஞ்சையன். நான் சொல்வது தவறு என்றும், ராமசாமியிடம் கிரையம் பெற்ற சுப்பிரமணிதான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் இல்லை. ஐ.ஜி நஞ்சையனை

எத்தனை நாட்களாக பழக்கம் என்றால் சிறிய வயதிலிருந்தே பழக்கம். வழக்கு விவரம் யார் யார்மீது வழக்கு போட்டுள்ளார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்து விவரம் என்னவென்று தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள முதல் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். ஐ.ஜி நஞ்சையன் சொன்ன விவரத்தின் அடிப்படையில் நான் முதல் பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ஆகவே எனக்கு வழக்கு சொத்து பற்றியும் வழக்கு விவரங்கள் பற்றியும் எனக்கு எதுவும் தெரியாது என்றும், பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.

சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம், நாள்.02.09.2024